[1973 மார்ச் 5

புலவர் சி. பழனிச்சாமி : இந்த வக்ப் போர்ட் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு ஊதியம் மாதாமாதம் பட்டு வாடா செய்யப்படவில்லை என்ற புகார்கள் வந்துள்ளனவா? இப்போது அது சரி செய்யப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு தவறான பிரசாரம் செய்து வருகிறார்கள். திரு. வகாப் அவர்கள் கேட்டுள்ள கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது, 1—7—1972 முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரிபற்றி அதன் மீது ஏதாவது சொல்ல வேண்டுமென்ற முறையில் இதுபோன்ற ஒரு பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த வக்ப் போர்ட் நடத்தும் கல்லூரியில் எவ்வளவு முஸ்லீம் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும், எவ்வளவு இந்துக்கள் எடுக்கப்படவேண்டும் என்று ஏதாவது விகிதாசாரம் வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ப்ரையாரிட்டி ஃபார் முஸ்லீம் அப்ளிகேஷன்ஸ், பின்பு இந்துக்களை எடுக்கவேண்டுமென்று ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விகிதாசாரம் கொடுக்கப்படவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் 25 சதவிகிதம் கூட முஸ்லீம் மாணவர்கள் இல்லை.

திரு. நா. வீராசாமி : மதுரையில் உள்ள இந்தக் கல்லூரியில் படிக்கிற மாணவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்த வக்ப் போர்டிலிருந்து ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஒரு நல்ல கேள்விதான். ஆனால் அந்த போர்ட் மூலம் வருகிற வருமானம் அதன் செலவிற்கே தற்போது போதாமல் இருக்கிறது. அதன் சொத்துக்கள் மீது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அவை நல்லமுறையில் முடியுமானால் உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் நடவடிக்கைகள் எடுக்க இயலும்.

1973 மார்ச் 5]

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரையில் உள்ள வக்பு போர்டு கல்லூரி ஜாதி மத வேறுபாடு இன்றி அனைவருக்கும் சமத்துவம் கொடுத்து மாணவர்களைச் சேர்த்துக் கொள்கிறது. அது ஒரு நல்ல கல்லூரி என்று மதுரை மக்களாலே கருதப்படுகிற அளவுக்கு பெரும் புகழும் பெற்று இருக்கிற காரணத்தால், அரசாங்கம் விசேஷ சலுகை கொடுத்து உதவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரின் கேள்வி நல்ல கேள்விதான். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் நல்ல ஒத்துழைப்பு தந்து ஆங்காங்கு நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் நல்ல முறையில் கட்டடங்கள் கட்டி நல்ல முறையில் அமைக்க வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேட்டதற்கு நல்ல பரிசு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினுக்கள் 236 & 237 இரண்டும் தள்ளி வைக்கப் படுகின்றன. வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. அறிவிப்பு.

(அ) கோரிக்கை எண் 43—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்பது பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 3—3—1973 சனிக் கிழமையன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் மானியக் கோரிக்கைகள் அறிவிப்பு பற்றி ஒரு விளக்கம் கேட்டார்கள். மானியக் கோரிக்கை எண். 43—பொதுச்சுகாதார மூலதனச் செலவு என்னும் தலைப்பிற்கு நிதி ஒதுக்கம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அதனுல் அந்த மானியக் கோரிக்கைக்கு வெட்டுத் தீர்மானம் கொடுக்க இயலவில்லை என்றும் குறிப்பிட்டார். நிதித் துறைக்கு இது குறித்து எழுதி விளக்கம் கேட்டுப் பதில் கொடுப்பதாக அன்று நான் கூறினேன்.